[திரு. பி. தங்கமணி] [2020 பிப்ரவரி 19

சொன்னதை மாற்றி, அந்த இரண்டு செய்தி நிறுவனங்களிலுமே "மக்கள் அதிகமாகக் குடிக்கின்றார்கள்; அதனால் வருமானம் அதிகமாக வருகிறது" என்று செய்திகள் வந்திருக்கின்றன. அதுகுறித்து நான் தங்களிடத்திலே உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கின்றேன். நான் பேசிய அந்த அவைக் குறிப்பையும் உங்களிடத்திலே கொடுத்திருக்கின்றேன். ஆக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு தகுந்த நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது அவை உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன்கீழ் அதுகுறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு இதனை அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடுகள்)

7. 18–2–2020 அன்று அமைச்சர்மீது எழுப்பப்பட்டு, தீர்ப்பளிக்கப்பட்ட உரிமை மீறல் பிரச்சினையை மீண்டும் வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையிலே இலங்கைத் தமிழர்களுக்கான இரட்டைக் குடியுரிமை குறித்த ஓர் உரிமை மீறல் பிரச்சினையை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்மீது நான் கொண்டு வந்தபோது, அவர்கள் இந்த அவையிலே தெரிவித்த பல்வேறு கருத்துகள், மீண்டும் அவர்மீது உரிமை மீறல் கொண்டு வருவதற்கான முகாந்திரம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள்; மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, நீங்கள் நேற்று ஓர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்தீர்கள். அது இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்மீது என்கிற காரணத்தினாலே, அவரை நான் விளக்கம் தெரிவிக்கக் கேட்டுக்கொண்டேன். அவரும் விளக்கம் தெரிவித்துவிட்டார். விளக்கம் தெரிவித்ததற்குப் பிறகு, (குறுக்கீடுகள்)

இருங்கள், இருங்கள், அவர் விளக்கம் தெரிவித்ததற்குப் பிறகு, நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன். அந்தத் தீர்ப்பின்மேல் மீண்டும் நீங்கள் இன்றைக்குப் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) திரும்பவும் அதுகுறித்துப் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

முற்பகல் 11–55

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பில் திரு. தங்கம் தென்னரசு தலையிடவில்லை; தலையிடமாட்டார்; தலையிடவும் கூடாது. அவர் சொல்வது என்னவென்றால், என்ன கருத்தை அமைச்சர் அவர்கள் சொன்னாரோ, அது உரிமை மீறல் என்று சொல்லி, அதை இங்கு கொண்டுவந்தார். ஆனால், பதில் அளிக்கிறபோது, அதே கருத்தை அமைச்சர் அவர்கள் திருப்பிச் சொன்ன காரணத்தினால், மீண்டும் அது உரிமை மீறல் ஆகிறது என்றுதான் அவர், தனது வாதமாக இங்கே வைக்க வந்தாரே தவிர, உங்கள் தீர்ப்பின்மீது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அதை என்னவென்று கொஞ்சம் கேட்டுக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரு பிரச்சினை இந்த அவையில் எழுப்பப்பட்டு, அது முறையாக விவாதிக்கப்பட்டு, இறுதியாக நான் தீர்ப்பும் வழங்கிவிட்டேன். தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னர், மீண்டும் அதை ஒவ்வொரு முறையும் குறிப்பிட்டு, 'அதிலே இது விட்டுப் போய்விட்டது, இதிலே அது விட்டுப் போய்விட்டது; அதனால் மீண்டும் உரிமை மீறல் பிரச்சினை தருகிறேன்' என்பதுபோன்று பேசுவது முறையல்ல. அப்படிச் செய்வதை, என்னுடைய தீர்ப்பிலே தலையிடுவதற்குச் சமமாக நான் கருதுகிறேன். ஆகவே, அதை நான் மறுக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, அமருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் அமரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. (குறுக்கீடுகள்) மீண்டும் பேச அனுமதி தருவதற்கு வாய்ப்பில்லை. ஒரு முறை ஒரு பிரச்சினை குறித்துப் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடுகள்) உரிமை மீறல் என்று கொடுத்தீர்கள். அதை அவையிலே பேசிவிட்டோம். (குறுக்கீடுகள்) இல்லை. உட்காருங்கள்.*